# போனஸ் 2016

### அடுத்த மாதம் தீபாவளிப் பண்டிகை

தீபாவளி என்றாலே ஆண்டு முழுவதும் அயராது உழைக்கும் தொழிலாளர்கள் ஆவலோடு எதிர்நோக்குவது போனஸ்தான்

இந்த ஆண்டு 2015 -2016க்கான போனஸ் வழங்கும் வேலையை வாரியம் 18.8.2016 சுற்றறிக்கையில் துவங்கி விட்டது. மின்சார வாரியத்தில் ஊதிய உயர்வு ஒப்பந்தத்திற்குட்பட்ட தொழிலாளர்களில் 2015-16 முழுமைக்கும் / பகுதிக்கும் போனஸ் பெறுவதற்கு தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கையை 30.09.2016 க்குள் அனுப்பி வைக்கும்படி அலுவலர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. அத்துடன் 2015-2016க்கு போனஸ் முடிவு அறிவித்தவுடன் தொகை வழங்கிட தேவைப்படும் பணியாளர்கள் சம்பள விவரங்களை கணக்கிட்டு தயாராக வைத்துக் கொள்ளும்படியும் அலுவலர்களுக்கு உத்திரவிட்டுள்ளது. சுற்றறிக்கையைப் பார்த்தால் வாரியத்தால் நேரடியாகப் பணியில் அமர்த்தப்பட்டு, வாரியத்திடமிருந்து நேரடியாக ரூ. 250/- தின ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு கருணைத்தொகை மட்டும்தான் வழங்கப்படும் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

இதில் என்ன விசேஷம் இருக்கிறது. ஆண்டாண்டு காலமாக பின்பற்றும் நடைமுறைதானே இது என்று நீங்கள் கேட்பீர்கள்.

**சட்டம் இயற்றப்பட்ட 1965 ம் ஆண்டில் குறைந்தபட்ச போனஸ் 4% என்பது 1975 முதல் 8.33% ஆகியது. 1965 ல் போனஸ் பெற சம்பள வரம்பு ரூ.1600/– என்பது 2015 ல் ரூ.21,000/– ஆகியது. 1965ல் போனஸ் கணக்கிட மாத சம்பளம் ரூ. 750/– என்பது 2015ல் ரூ.7000/– என எடுத்துக்கொள்ளப்பட்டது. 1998 லேயே நாம் கோரிக்கை முன்வைத்த பிறகும், பல ஆண்டுகளாக கருணைத்தொகை மட்டுமே வழங்கப்பட்டுவந்த பகுதிநேரத் தொழிலாளர்களுக்கு 2013 ல் சட்டப்படி போனஸ் பெறப்பட்டது.**

காலத்திற்கேற்ப கொள்கைகள் மாறுது. கணக்குகள் மாறுது. எல்லாமே மாற்றத்திற்குரியதுதான். ஆனால், வாரியத்தின் நேரடி ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், தின ஊதியத் தொழிலாளர்களுக்கு மட்டும் போனஸில் மாற்றமே கிடையாதா? எப்பொழுதுமே கருணைத் தொகை தானா? என்ன நியாயமிது ?

சில நேரங்களில் நியாயங்கள் கிடைப்பது தாமதமாகலாம். ஆனால், என்றுமே கிடைக்காமல் போகாது. உதாரணத்திற்கு,

இமாச்சல பிரதேச மின்வாரியத்தில் தின ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவது சம்மந்தமாக 2 வழக்குகள்.

**ஒரு பெண் கடைநிலை ஊழியர் தின ஊதியம் பெறுபவர், 1993–ம் ஆண்டிற்கு போனஸ் மறுக்கப்பட்டது. பிரச்சினை, மாநிலத்தின் உயர் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. தின ஊதியத் தொழிலாளரும், போனஸ் சட்டப்படி பணியாளரே. அவருக்கு போனஸ் பெறும் சட்ட உரிமையை மறுக்க முடியாது என்று தீர்ப்பானது.**

சுமுத்திராதேவி எதிர் இமாச்சல பிரதேச மின்வாரியம்

2010 (1) LLJ 199 (H.P. H.C.)

**இன்னொரு வழக்கில் போனஸ் சட்டம் 2(13) ன்படி பணியாளர் என்ற விளக்கத்தில் தின ஊதியம், வார ஊதியம், மாத ஊதியம் பெறுபவர், தற்காலிகம், நிரந்திரம் என்று எந்த வரையறையும் இல்லை. போனஸ் ஆண்டில் 30 நாட்களுக்கு குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும் என்பது மட்டும்தான் ஒரே நிபந்தனை, என்று தீர்ப்பானது.**